**செய்தி வெளியீடு எண்: 691** **நாள்: 27.09.2018**

# செய்தி வெளியீடு

## நறுமணச்சுவை எண்ணெய், வாசனை திரவியங்கள் மற்றும் அரோமா தெரபிக்கான மூன்று நாள் பயிற்சி மற்றும் கருத்துப் பட்டறை

நறுமணச்சுவை மற்றும் வாசனை திரவிய பொருட்களுக்கு உலக சந்தையில் தேவை அதிகமாக இருப்பதால் புதிய தொழில்முனைவோரை இத்துறையில் உருவாக்கி வேலைவாய்ப்பை பெருக்கி, நாட்டின் ஏற்றுமதியை அதிகரிக்கும் பொருட்டு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், தமிழ்நாடு, நறுமணச்சுவை எண்ணெய், வாசனை திரவியங்கள் மற்றும் அரோமா தெரபிக்கான மூன்று நாள் பயிற்சி மற்றும் கருத்துப் பட்டறையை எதிர்வரும் அக்டோபர் மாதம் மூன்று முதல் ஐந்து தேதி வரை சென்னையில் ஹோட்டல் லீ ராயல் மெரீடியனில் நடத்த உள்ளது. இப்பயிற்சி, உத்திரப்பிரதேச மாநிலத்தில் உள்ள மத்திய அரசால் நிர்வகிக்கப்படும் நறுமணச்சுவை தொழில் மேம்பாட்டு மையத்தின் (Fragrance and Flavor Development Centre) துணையோடு நடத்தப்படுகிறது.

ஏற்கனவே, FFDC உடன் போடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில், இத்தொழிலின் முன்னேற்றத்திற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இந்நிறுவனம் எடுத்து வருகிறது. இதன் மூலம் வாசனை திரவியங்கள் மற்றும் நறுமணங்கள் சார்ந்த தொழிலில் தமிழ்நாடு சிறந்து விளங்கவும், விவசாயிகள் தங்களின் சாகுபடியை மதிப்புக்கூட்டப்பட்ட பொருளாக மாற்றுவதன் மூலம் அவர்களின் வருமானமும் பெருகி தொழில் மற்றும் வேலை வாய்ப்பு அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது. இதற்கான தொழில் நுட்பங்களை நம் மாநிலத்திலேயே கிடைக்கச் செய்ய தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், தமிழ்நாடு, பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது.

இப்பயிற்ச்சியில் நறுமணம் மற்றும் வாசனை திரவியங்களுக்கான வணிக வாய்ப்புகள், உலகளவில் இதன் தேவை, உற்பத்தி, மதிப்புக் கூட்டப்படுதல், மூலப் பொருட்கள், தர நிர்ணயம், நறுமணங்களை உருவாக்குதல் மற்றும் அதற்கான செய்முறை பயிற்சி, அரோமா தெரபிக்கான நறுமண எண்ணெய் உருவாக்குதல் போன்ற பல்வேறு தொழில்நுட்பம் சார்ந்த அம்சங்கள் விவரிக்கப்படும்.

இப்பயிற்சியில் கலந்து கொள்ள, ரூபாய்.13000/- பயிற்சி கட்டணமாக செலுத்த வேண்டும். கட்டணத்துடன் பயிற்சிக்கு விண்ணப்பிக்க, 01—10-2018 கடைசி நாள் ஆகும். வெற்றிகரமாக பயிற்சி முடிப்பவர்களுக்கு உரிய சான்றிதழ் வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு 9381131456, 8754541894 ஆகிய எண்களில் தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தை தொடர்புகொள்ளலாம்.

. **வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**